## இயல் 7.5 வடிவியல்

பயிற்சி எண் :: 7.5.2.4.H

வடிவியல் (Geometry) - பாடச்சுருக்கம் - தநாஅபு - பயிற்சி 5.6

### வடிவியல் (Geometry) - பாடச்சுருக்கம் - தநாஅபு - பயிற்சி 5.6

1. இரு இணைகோடுகளைக் குறுக்குவெட்டி வெட்டும்பொழுது உருவாகும் ஒத்த கோணங்கள் சமம்.

அ) சரி ✓

ஆ) தவறு




ஒத்த கோணச்சோடிகள் ஒரே நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன.

2. பொதுவான ஒரு முனை, பொதுவான கதிர் கொண்ட வெவ்வேறு உட்பகுதிகளைக் கொண்ட இரண்டு கோணங்கள் அடுத்துள்ள கோணங்கள் எனப்படும்.

அ) தவறு

ஆ) சரி ✓




$\angle 1$, $\angle 2$ மற்றும் $\angle 2$, $\angle 3$ ஆகியவை அடுத்துள்ள கோணங்கள் ஆகும்.

3. இரு இணைகோடுகளைக் குறுக்குவெட்டி வெட்டும்பொழுது உருவாகும் ஒன்றுவிட்ட உட்கோணச் சோடிகள் சமம்.

அ) சரி ✓

ஆ) தவறு

$\angle 3$, $\angle 5$ மற்றும் $\angle 4$, $\angle 6$ ஆகியவை ஒன்றுவிட்ட உட்கோணச் சோடிகள் ஆகும்.

4. மிகை நிரப்பு கோணங்களாக இருக்கும் அடுத்துள்ள கோணங்கள் நேரிய கோண இணைகள் எனப்படும்.

அ) தவறு

ஆ) சரி ✓




$\angle 1$, $\angle 2$ ஆகியவை அடுத்துள்ள கோணங்கள். $120^\circ + 60^\circ = 180^\circ$. எனவே அவை நேரிய கோண இணைகள் ஆகும்.

5. இரு இணைகோடுகளைக் குறுக்குவெட்டி வெட்டும்பொழுது உருவாகும் ஒன்றுவிட்ட வெளிக்கோணச் சோடிகள் சமம்.

அ) சரி ✓

ஆ) தவறு




$\angle 1$, $\angle 7$ மற்றும் $\angle 2$, $\angle 8$ ஆகியவை ஒன்றுவிட்ட வெளிக்கோணச் சோடிகள் ஆகும்.

6. ஒரு கோட்டின் மீது ஏதேனும் ஒரு புள்ளியில் அமையும் கோணங்களின் கூடுதல் 180° ஆகும்.

அ) தவறு

ஆ) சரி ✓

$\angle 1, \angle 2, \angle 3$ ஆகியவற்றின் கூடுதல் $50^\circ + 85^\circ + 45^\circ = 180^\circ$ ஆகும்.

7. இரு இணைகோடுகளைக் குறுக்குவெட்டி வெட்டும்பொழுது உருவாகும் ஒரே பக்கம் அமைந்த உட்கோணங்கள் மிகை நிரப்பு கோணங்கள்.

அ) சரி ✓

ஆ) தவறு




$\angle 3$, $\angle 6$, $\angle 4$, $\angle 5$ ஆகியவை ஒரே பக்கம் அமைந்த உட்கோணங்கள் மிகை நிரப்பு கோணங்கள் ஆகும்.

8. ஒரு புள்ளியைச்சுற்றி அமையும் அனைத்துக் கோணங்களின் கூடுதல் 360° ஆகும்.

அ) தவறு

ஆ) சரி ✓

கோணங்களின் கூடுதல் = $24^\circ + 48^\circ + 72^\circ + 96^\circ + 120^\circ = 360^\circ$.

9. இரு இணைகோடுகளைக் குறுக்குவெட்டி வெட்டும்பொழுது உருவாகும் ஒரே பக்கம் அமைந்த வெளிக்கோணங்கள் மிகை நிரப்பு கோணங்கள்.

அ) சரி ✓

ஆ) தவறு




$\angle 1$, $\angle 8$, $\angle 2$, $\angle 7$ ஆகியவை ஒரே பக்கம் அமைந்த வெளிக்கோணங்கள் மிகை நிரப்பு கோணங்கள் ஆகும்.

10. இரு கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்ளும்போது அமையும் அடுத்தமையாக் கோணங்கள் குத்தெதிர்க் கோணங்கள் எனப்படும்.

அ) தவறு

ஆ) சரி ✓




$\angle 1$, $\angle 3$ மற்றும் $\angle 2$, $\angle 4$ ஆகியவை குத்தெதிர் கோணங்கள் ஆகும்

11. இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட கோடுகளை ஒரு கோடு வெவ்வேறு புள்ளிகளில் வெட்டினால் அக்கோடு குறுக்கு வெட்டி எனப்படும்.

அ) சரி ✓

ஆ) தவறு




### இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/-uiyXrKPzSE


### Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 16th January, 2023 :: 18:55 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**

**https://ramaswamychellammaltrust.org** & **info@ramaswamychellammaltrust.org**

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**